வெகு நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ''கல்யாணி ரிசர்வோயர்'' திட்டம் இப்பொழுது செயல்படும் நிலைக்கு கொண்டுவர ஒரு நவீன உருவத்திற்கு வந்து உள்ளது. சுமார் ரூ 3 கோடி செலவில் அமைக்கப் போகும் இத்திட்டத்தில் ரூ 120லக்ஷம் தேவஸ்தானம் அளிக்க இருக்கிறது. இத்திட்டம் நிறைவேற்றினால் பலகலைக் கழகம் சுற்றுப் பக்கத்தில் தண்ணீர் வசதி அளிப்பதோடு அல்லாமல், திருமலை பட்டணத்திற்கு சுமார் 5 லக்ஷம் காலன் தண்ணீர் கிடைக்கப் பெறும். யாத்ரிகர்களுக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்படாதவாறு தவிர்க்கலாம். இத்திட்டத்தை கூடிய விரைவில் முடிக்க தன்னால் வாக்களித்த நிதி உதவியை தர தேவஸ்தானம் முன் வந்தது

தமது உத்தம கொள்கைகளின் மூலமும், தன் நம்பிக்கை மூலமும் பாரத சரித்திரத்தில் ஒரு பொற்காலத்தை அமைத்த, திருமதி இந்திரா காந்தியால் அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட இருக்கிறது. பல வருஷங்கள் வரை ஆயிரக்கணக்கான மக்களின் ஆசைகள், குறிக்கோள் நிறைவேற நாட்டின் முதல்வரால் துவக்கப்படுவது தேவஸ்தானத்தோருக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஸ்ரீமதி இந்திரா காந்தி இந்த மாதம் 3-ந் தேதி இரவு திருமலைக்கு வருகிறார். மறுநாள் காலை சுப்ரபாத, அபிஷேக சேவைகளுக்குச் சென்று ஏழுமலையான் அருளைப் பெறுவார். யுத்தத்தில் வெற்றி கிடைத்தப்பிறகு ஏழுமலையான் அருளைப் பெறவே வருகிறார்.

தேவஸ்தான அதிகாரிகள் மனப்பூர்வமாக, எல்லை இல்லாத மகிழ்ச்சியுடன் நம் நாட்டு முதல்வரை வரவேற்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். எப்பொழுதும் அவருக்கு ஏழுமலையான் அருள் கிடைக்கும். அவரது உத்தமமான ஆலோசனைகளுக்கும், கொள்கைகளுக்கும் ஏழுமலையான் தமது முழு ஆசிகளை தருவார் என்பதில் சந்தேகமில்லை.

இலவச அறுவை சிகித்சை

திருமலை - திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதரவால் சுமார் 15 நாட்கள் டாக்டர் மோடியால் செய்யப்பட்ட அறுவை சிகித்சைகள் வெற்றிகரமாக முடியப்பட்டன. டாக்டர் மோடி 1200 க்கு மேற்பட்ட நபர்களுக்கு கண் சம்பந்தப்பட்ட பல அறுவை சிகித்சைகளை செய்தார். தேவஸ்தானம் நோயாளிகள், அவர

களுக்கு உதவி புரிய வந்தவா கள் சுமார் 45,000 க்கு மேற் பட்ட நபாகளுககு உணவு வசதி செய்து தநதது அறுவை சிகித்சை பட்டியலே நோக்கும் பொழுது. இதுவரை செயதவை பலனற்று போகவில்லே எனறும் கண பாாவை அளிப்பதில பூாண வெற்றி கிடைக்கிறது.

மோடி அவாகளே பரிசுத்த ரிஷி எனலாம. தன்னல மற்ற சேவை செய்யும மோடி அவா களே தேவஸ்தானம கௌரவித்து ஆவன உதவி செய்தது. இதைப் போல் மற்ற சமுதாய சங்கங்கள் அவரது தன்னலமற்ற தியாக உணர்ச்சியை கௌரவித்து, நாட்டில் பெருகி வரும் மக்களி னடையே இருக்கும் குருட்டுப் பார்வையை போக்க வழி செய் வோராக. பல கண் வைத்திய நிபுணாகள, இதில ஈடுபட் டோர்கள் இருப்பினும கண பாாவை அளிககும விஷயததில் சறறு பின் தஙகி உளளோம். இநத அரிய சநதாபபததை கௌரவிதது ஒவ்வொரு கிராமததிறகும் கிடைக்கச் செயது நமது மக்களின நலனுக்கு பாடுபடும் கழகங் களின முக்கிய குறிக்கோளாக அமையவேணடும். இப்படி இலலேயெனில் சாம்பலில இட்ட பன்னீர் போல ஆகி விடும்.

அனுவிலிருநது. அகில உல கத்தையும் படைத்து, ஆட்டி ஆனநதப் பரவசம செயயும் ஆதிநாராயணன, இருதயததில் வீறறிருக்க, ஒன்பது வாசல் உளள, நடமாடும் கோயிலாம் மனிதன். பிறகு மக்கள் சேவை நாராயணன் சேவையே ஆம்.



செய்திச் சுருக்கம்

மதராஸில் திருமலை - திருப்பதி தேவஸ்தான விசாரணை நிலையத்தின் 23-வது வருடாந்தர விழா சிறப்பாக நடந்தேறியது. சுப்ரபாத போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கப்பட்டது.

விசாரணை நிலையத்தின் அருகே அலங்கரித்து அமைக்கப்பட்ட பந்தலில், தமிழ்நாட்டு கவர்னர் திரு கே கே ஷா அவர்கள் தலைமை தாங்க, கூட்டம் வெகு விமரிசையாக நடந்தது.

கே கே ஷா தமது உரையில் வேதங்கள், உபநிஷத்துக்கள் முதலியனவற்றிற்கு சம்பந்தப்பட்ட விஷயங்களில் பரிசோதித்து, மக்களுக்கு அவ்விஷயங்களை பரப்ப, தேவஸ்தான நிதிகளை செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வெளிநாட்டு மக்கள் தங்கள் கலாசாலைகளில் இந்திய மதச சம்பந்தமான விலைமதிக்கவொண்ணாத தத்துவங்களை வெளியிடும், நம நாட்டு மக்கள் இவ்விஷயத்தில் அதிக சிரத்தை காட்டாததை குறித்து விளக்கினார்.

சபையில் பேசிக் கொண்டிருக்கும் ஆந்திர பிரதேசத்தின் முதல் அமைச்சர் திரு பி வீ நரசிம்மராவ் அவர்கள்





மினசார விளககுகளால அல காிககபப——டதேவஸதானததின செயதி விசாரணை அலுவலகம

ஆநதிரபிரதேச முதலமைசசா திரு பி வி நரஸிமஹ ராவ, கவானா அளிதத உரைககு தமது அபிபராயததையும ஒரு மனதாகத தெரிவிததாா தமது மாகாணஙகளில புதிதாக அமைககபபடும பலகலை கழகத்தில ஆாஷ₊வாஙமய சமபநதப படடவறறை பரிசீலிதது போதிகக ஏறபாடுகள செயயப போவதாக வாககளிததாா

சபை ஆரமபிககுமமுன விசாரணை நிலையததின காாயதாசி திரு ஸி சஞசீவிநாயுடு, முககிய நபாகளிடம வநத வாழதது பததிரஙகளை வாசிததாா தகவல சஙகததலைவா கே வெஙகட ஸ்வாமிநாயுடு வருடாநதர பததிரததைச சமாபபிதது, மததிய வாக மககளுககு ஏறப விவாஹஙகள செயதுவைபபதறகும, மதசசமபநதமான நிகழசசிகளை நடததவும, ஒரு பெரிய ஹால அமைத்துத் தர தேவஸதானததைக கேடடுக கொணடாா

திருமதி ஷா அவாகள் சுபரபாத போட்டியில வெறறி பெறற நபாகளுககு பரிசு அளிததாா

தேவஸ்தான தாமகர்த்த மண்டலி அங்கத்தினர் கே ஸிததய்யாநாயுடு, ஹிந்துமத பிரசார விஷயங்களில் தேவஸ தானம் செய்து வரும் முறைகளை விளக்கினார்.

அமைச்சர் திரு கே. கோபால்நாயுடு (போககுவரத்து) அக்கிராஜு வாசுதேவராவ் (செய்தித்துறை) தேவஸ்தான குழுத்தலைவா திரு ஜி. ரங்கராஜு, சர்வஸ்ரீ வி சன்னியாசி நாயுடு, கடடன்ன, கே. பி கிருஷ்ணமூர்த்தி, பி. நாகிரெட்டி ஆகியோாகள் கலந்து கொண்டனர்

* * * *

இலவச அறுவை சிகிச்சை

திரு டாக்டர் மோடி அவர்களால் நடத்தப்பட்ட 15-வது இலவச அறுவை சிகித்சையை தேவஸ்தான கார்ய நிர்வாக அதிகாரி திரு கே சந்திரமௌளிரெட்டி தொடங்கி வைத்தார்

11-1-72 முதல் 25-1-72 வரை தேவஸ்தானத்தாரின் உதவியால் இரண்டாவது சத்திரத்தில் நடத்தப்பட்ட அறுவை சிகித்சையில் டாக்டர் மோடி அவர்கள் 24,000 நபர்களுக்கு மேல் பரிசோதித்தார் 8000 நபர்களுககு இலவசத்தில் மருந்து கள வழங்கினார். 1220 அறுவை சிகித்சைகள் செய்தார். இத தோடல்லாமல் தேவஸ்தான 45,346 மேம்பட்ட நோயாளி களுக்கும், அவர்களுக்கு உதவி செய்ய வந்தோர்களுக்கும் இலவச உணவு அளித்தது.

திரு மோடி அவர்கள் 15 வருடங்களில் செய்த அறுவை சிகித்சைகளில் சுமார் 2,67,884 நபர்களை சோதனை செய்தார் எனவும், 91370 நபர்களுக்கு இலவச மருந்து அளித்ததாகவும், 17165 நபாகளுக்கு அறுவை சிகித்சை நடத்தியதாகவும், சம பந்தப்பட்ட அதிகாரிகளின பட்டியலிருநது தெரிய வருகிறது.

அறுவை சிகித்சையை முன்னிட்டு தேவஸ்தான காாய நிர்வாக அதிகாரி சந்திரமௌளி ரெட்டி இலவசமாக பஸ் ஒன்றை கொடுததார். மற்றும் உதவி கார்ய நிர்வாக அதிகாரி ராமசாமி ரெட்டி அவர்கள், போக்கு வரத்து அதிகாரி கே வி. ராமிரெட்டி அவாகள், கே எஸ். ரெட்டி டிபோ மேனேஜா அவர்கள் மற்றும் சில அதிகாரிகள் வந்திருந்தனர்.

அறுவை சிகித்சை முடிவுவிழா இரணடாவது சததிரத்தில் 25-1-72 அனறு நடந்தது. சித்தூா ஜில்லா கலெக்டர் திரு பி வி. ராமாராவ் அவாகள் தலைமை தாங்கினார். யாத்ரீகாகள் சௌகர்ய அதிகாரி வாசுதேவ நாயுடு அவர்கள் தலைவரை வர

வேற்று, மோடி அவர்களின் திறமையை விளக்கினர். சச்சி தானந்தம் அவர்கள் அறுவை சிகித்சை பட்டியலை சமாபபித்தார்.

தேவஸ்தான கார்ய அதிகாரி திரு சந்திரமௌளிரெட்டி அவர்கள் தமது நன்றி உரையில, இதுவரையில செய்த அறுவை சிகித்சைகள் செய்த பிறகு வேண்டிய கவனிப்பு இல்லை என்பதில் ஆதாரமற்றதுஎன்றும இதனல எவரும் இறக்கவில்லை என்றும் கூறினர். இந்த அறுவை சிகித்சையில ஒத்துழைத்தோருக்கு தமது நன்றியை தெரிவித்தார

பீஹார் மாஜி கவர்னர் ஸ்ரீ எம அனந்தசயனம அய்யங்கார் தமது உரையில் ஸ்திரமாக உள்ள கண வைத்திய நிபுணர்கள் டாக்டர் மோடி வழியைப பினபற்றி, சமுதாய சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொணடார.

சதைத்தலைவா ஸ்ரீ. பி வி ராமாராவ மோடியினது தன்னல சேவையைப் பற்றி விவரிததார நமது நாட்டில் எல்லோரையும்விட இவரே பாரத மக்களுககு நன்முறையில கண் வைத்தியம செய்து வருகிறர் எனறும கூறினர மோடி பட்டியல் அனுசரித்து, சிறிது பொருள சேகரித்து இருந்தால் இச்சமயத்தில ஒரு கோடீஸ்வரராக திகழ்ந்து இருப்பார் இப பேற்பட்ட ஆலோசனை அவருககு இல்லாததால், அவரது தியாக உணர்வு நமக்குத் தெரிய வருகிறது இப்பேற்பட்ட தியாக மூர்த்திககு பாரத ரத்னம என்று விருது வழங்கி பாரத அரசு கௌரவிகக இயலும். மக்களின் சேவை இறைவனது சேவை என்று சொலலி தமது உரையை முடித்தார்

ஸ்ரீமதி பி வி ராமாராவ் இலவச கண வைத்திய பணியில ஈடுபட்டு உதவி செய்தோருக்கு நற்சாட்சி பததிரம் அளித்தார்

டாகடர் தமது நன்றி உரையில, 1943-ம வருடம் முதன் முதலில் குஜராத் மாகாணத்தில எபபடி இலவச கண வைத்திய சிகித்சை ஆரம்பித்தார என்பதை குறித்து விவரித்தார் இந்த இலவச வைத்தியம் 800-வது என்றும கூறினர்

அச்சத்துடன் கூடிய சாஸ்திர சமுதாய வளர்ச்சியினுல், மக்களின் ஆன்மீக வளர்ச்சி குறைந்து விடுகிறது. யோகங்கள், மற்ற தத்துவ சம்பநதமான செயல்களில் ஈடுபட்டால் மீண்டும் அவர்களில் ஆன்மீக உணாசசி வளர உதவும் என கூறினர்.

இரண்டாவது சத்திர அதிகாரி ஸ்ரீ. ஜி. கிருஷ்ணமூர்த்தி நன்றி உரையுடன் சபை முடிந்தது.

* * * *

திருமலையில் முதல் அமைச்சர்

ஆந்திரப் பிரதேச முதல மந்திரி ஸ்ரீ. பி வி நரஸிமஹ ராவ் 5-1-72 அன்று திருமலையில ஏழுமலையானைத் தரிசிதது அவரது ஆசிகளைப பெற்றுர் ஸ்ரீ ரங்கராஜு குழுத்தலைவரான மறற அங்கததினாகள் அவரை வரவேற்றனர். தேவஸ்தான கார்ய அதிகாரி ஸ்ரீ சநதிர மௌளி ரெட்டி அவரை வரவேற்றுா.

திருமலையில் கமிட்டித் தலைவா ஸ்ரீ ரங்சராஜு, தேவஸ் தானத்தின சாாபில தேச பாதுகாபபு நிதிககாக 10 லக்ஷ ரூபாய செக ஒன்று கொடுத்தாா. தேவஸ்தான கமிட்டியின மற்ற அங்கத்தினர்களும் வநது இருநதனா

* * * *

திருத்தணிக்கு பஸ் போக்கு வரத்து

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி எழுநதருளியிருககும திருததணி க்ஷேத்திரத்திக்கு திருப்பதியிலிருநது தேவஸ்தான பஸ்கள செல கின்றன இதனுல் திருபபதி திருத்தணி க்ஷேத்திரங்களை தரிசித்து, நல்லாசிகளை பெற முடியும். இதர விஷயங்கள் திருமலை - திருப்பதி தேவஸ்தான போககு வரத்து ஜெனரல் மேனேஜர் ஆபீஸரிடமிருநதோ, அல்லது திருமலை - திருப்பதி தேவஸ்தான விசாரணை நிலையம, திருததணியிலிருநதோ தெரிநது கொள்ளலாம்.

* * * *

பெங்களூர் பஸ்களின் டிக்கெட் விலை அதிகரிப்பு

மைசூர் அரசாஙகம் பஸகளின் டிக்கெட விலையை அதிகரித்த தால் திருமலை - திருப்பதி தேவஸ்தானம் பெஙகளூர்க்குச் செல்லும் பஸகளின் டிக்கட் விலையை அதிகரித்தது. இபபொழுது பெஙகளூரிலிருநது பெரியோருக்கு ரூ 10-10, சிறியோருக்கு (அரை டிக்கெட) ரூ. 5-10.

* * * *

நாராயணவனத்தில் தெப்போற்சவம்

நாராயணவனம் கிராமத்தில் எழுநதருளியிருக்கும் ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வரஸவாமிககு தெப்போற்சவம் 10-2-72 லிருந்து 14-2-72 வரை நடைபெற இருக்கிறது

நாராயணவனத்தில ஸ்ரீ வெங்கடேஸவரஸவாமி, ஆகாச ராஜ குமாரததி பத்மாவதியை மணந்தார் என புராணப் பிரசித்தி.

* * * *

பாரத ஜோதிஷத்தின் வரலாறு

—: ஸ்ரீ என சுநதரராஜன B A, சென்னை - 44. —

★ ★ ★

வேதததில ஒரு அஙகமாக ஜோதிஷததைக கூறபபட்டிருக கிறது வேதாங்கம ஜோதிக்ஷம என்று ஒரு பிரிவே வேதத்தில் இருக்கிறது இதில் நக்ஷததிரஙகளைப பறறிக கூறபபட்டுள்ளது. மேலும புருஷ ஸூகததில "சநதர மா மனஸோ ஜாத க்ஷூ ஸூர்யோ அஜாயத" "பதபயாம பூமிர் திசஃ ச்ரோ-த்ராபத ததாலோகாகுடி அகலபயன்" என்றதாலும், ஸ்ரீ ஸூக்ததில் "சநதராம ஹிரண்மயிம லக்ஷ்மீம" என்றதாலும, "சூர்யாம் ஹிரண்மயிம லக்ஷ்மீம" என்றதாலும், கிரகஙகளைப பறறி வேதத்தில் கூறியிருபபது நிதாசனம்.

காலம சென்ற பி ஜி திலகர் தாம எழுதியுள்ள THE ORION என்ற புததகத்தில 38-ம பககததில "வேதாஙக ஜோதிஷத்தில்" கூறியுள்ளதை எடுதது மேறகோள காட்டியுள்ளார அவர் கூறுவது "சூரியனும சநதிரனும சேர்நது ஸரவிஷ்டா நக்ஷததிரததின அவிட்டம ஆரமபததில் ஸபுட ரீதியாக இருந்தபோது காலககணககின் முதல வருஷம ஆரம்பமாயிற்று; உ த த ரா ய ண மு ம அப்பொழுதுதான துவங்கியது" என்று கூறியுள்ளார வேத காலததில ஆரியர்கள கறற கல்விகளைப் பறறிககூறி ஒரு உபநிஷத் பட்டியலே கொடுததுள்ளது அநதப் பட்டியலில "வேதம, இதிகாசபுராணம, பிதருயா, ராசி, முதலியனவகளுடன நக்ஷதர வித்யா வான சாஸ்திரம" இடம பெறுகிறது மறறொரு உபநிஷத், "வேதம, சிக்ஷை, கல்பம, வியாகரணம, நிருத-தம், சந்தம," இவற்றுடன "ஜோதிக்ஷம்" இருநததாகக கூறுகிறது இநத ஆறுமே "வேதாங்கங்களாக" உபநிஷத் துக்களில கூறபபட்டுள்ளது. ஸ்ரீமானகள மஜூமதார, ராய் சௌத்ரி, முதலியர்வாகள எழுதியுள்ள இநதிய சரிததிரத்தில ரிகவேதம் கிறிஸது பிறபபதற்கு சுமார 2000 வருஷஙகளுககு முன்பு ஏற்பட்டதாகக கூறியுள்ளார்கள கி மு 2000 ஆனுல் "பகவத் கீதை" யில் வேதங்களைப பறறி கூறபபட்டிருபபதாலும், பாரதப்போர் முடிந்ததும ஸ்ரீ கிருஷ்ண பகவான தாம வைகுண்டம் சென்றதும் கலி ஆரமபமாகும் என்று மஹாபாரத-தத்தில் கூறியிருப்பதாலும, தற்கால வான சாஸதிரததின்படி கலி, கிறிஸ்துவுக்கு சுமார் 3102 ஆணடுகளில கி மு 3102

ஆரமபம எனறு கூறியுள்ளதாலும், வேதங்கள் 3102 கி. மு. வுக்கு முன்பே ஏறபட்டிருககவேண்டும எனறும தோன்றுகிறது. மேலும், மஹாபாரதத்திற்கு முனபே ராமாயணம் ஏற்பட்ட தால், இந்த இரு புராணங்களும், வியாஸரும், வால்மீகியும் கி. மு. 3102-க்கு முற்பட்டவாகள என்பது விளங்கும். வால்மீகி ராமாயணததில ஸ்ரீராமன் அவதரிதத காலத்தைக் கலி பின் வருமாறு குறிப்பிட்டிருககிறுா.

'' ததஸச துவாதஸே மாஸேசைத்ரே நவமிகே திதௌ
நக்ஷத்ரே அதிதி தைவதயே ஸ்வோச்ச ஸம்ஸததேக்ஷ பஞ்சசு
கரஹேஷு கர்க்கடேலகனே வாகபதா விந்து நாஸஹா
பரோதயமானே ஜகந்நாதம ஸர்வலோக நமஸக்ருதம ''

சைத்ரமாஸம் நவமி, புதன்கிழமை புனாவஸு நக்ஷத்திரத்தில் ஐநது கிரகஙகள் உச்சத்திலிருக்கும் போது கடகலக்னத்தில் ஸ்ரீராமர் அவதரித்தார் என்பது இதன் பொருள:

ஸ்ரீ மஹாபாரததிலும பாரத போருக்கு அமாவாஸை அன்று நாள் பாாத்து ஸகாதேவர் கொடுத்ததும ஸ்ரீ கிருஷ்ணன அமாவாஸை முதல நாளே சூரிய சநதிரா சேர்க்கையால ஏற்படுததியதையும அறிவோம மேலும் நக்ஷத்ர மண்டலம கிருததிகை நக்ஷதரத்துடன் ஆரம்பமானது என்று ''ஸ்தபாத பராம்மணம'' கூறுகிறது மேலும ''யாஜுஷ ஜோதிஷத்தின்'' 5-வது ஸ்லோகததை வியாக்கியானம செய்த ''ஸோமகார சேஷ நாகா'' காக ஸம்ஹிதையிலிருந்து மேற்கோள் காட்டி ''தேஷாமச ஸ்ாவேஷ ம நக்ஷத்ராணும் கர்மாஸு கிருத்திகா பிரதமாம சக்ஷதே ஸ்ரவிஷ்டாது ஸம்ச் யாயாஹ் பூாவ லக்ஷணம'' என்று கூறியுளளாா அதாவது நக்ஷத்திரங்களுக்கெல்லாம் கிழககில் ஸரவிஷ்டா நக்ஷத்திரம் இருநதது என்று பொருள்

பிரஹமாண்ட புராணம் (அத்-54) பின் வருமாறு கூறுகிறது.-

'' கிருததிகாஞம யதா சூாயா பிரதமாம சா கதோ பவேத்
விசாகாஞம ததா ஞ்நேயாஸ சதுாத்தாம் சே நிஷாகரா
விசாகாணும் யதா சூாயாஸ சரதே அமசாம த்ரிதீயகம
ததா சந்திரம விஜாநீயத கிருத்திகா சிராஷி ஸதிதம்
விஷுவநதம ததா வித்யா தேவா மஹுா மஹரிஷயா
ஸம ராதரி ரஹஸ் சைவ யாதாததத் விஷுவத் பவேத. ''

இதன் பொருள் பௌர்ணமியன்று சூரியன் கிருத்திகை நக்ஷத்திரத்தில் பிரவேசிக்கும்போது சந்திரன் விசாகம் 4 பாகையில் இருந்தது. சூரியன் விசாகம் 3 பாகையில் பிரவேசிக்கும்போது சந்திரன் கிருத்திகையின் ஆரம்பத்தில் இருந்தது. அந்த காலங்களில் பகற் பொழுதும் இரவுப் பொழுதும் சமமாக இருக்கும் என்று மகரிஷிகள் கூறியுள்ளனர்.

மேற் கூறியவற்றிலிருந்தெல்லாம், கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே கி மு 3000 வேதாங்க ஜோதிஷம், ரிக்வேதம், உபநிஷத்துக்கள், பிராம்மணங்கள், ராமாயணம், மஹாபாரதம், பிரஹ்மாண்ட புராணம் முதலிய நூல்களிலெல்லாம், கிரகங்களைப் பற்றியும் நக்ஷத்திரங்களைப் பற்றியும், வான சாஸ்திர விஷயங்களைப் பற்றியும ASTRONOMICAL DATA கூறியிருப்பது புலனுகும் இது இவ்வாறு இருக்கையில், கிரேக்கர்கள் THE GREEKS நம் நாட்டில் முதல முதலில் படையெடுத்து வந்தது சுமார் கி. மு 327-ல் அதாவது மேற்கூறிய நூல்களுக்கு சுமார் 2700 வருடங்களுக்குப் பிறகு ஆகையால் நமமுடைய ஜோதிஷ சாஸ்திரம் கிரேக்கர்களிடமிருந்து கற்றுக் கொண்டது என்று கூறுவது அசட்டுத்தனமாது. ஆதாரமற்றது. (விஞ்ஞான ரீதியாக நிலைக்க முடியாதது) மேலும் உலகப் புகழ்பெற்ற ''சூரிய சித்தாந்தம்'' என்ற நூலை எழுதிய ஆரிய படடர், வராஹ மிஹிரருக்கு முன்பு வாழ்ந்தவர் இவருடைய சித்தாந்தத்தையும் மற்றும் நான்கு சித்தாந்தங்களையும் ஆராய்ந்து ஸ்ரீ வராஹ மிஹிராசசார்யார் தம்முடைய ''பஞ்ச சித்தாந்திகா'' என்ற நூலை எழுதியுள்ளார் வாரஹமிஹிரா, மஹாகவி காளிதாஸருடன் உஜ்ஜனியில் விக்கிரமாதித்தனுடைய ராஜசபையில் வாழ்ந்தவர் காளிதாஸர் தாம எழுதிய ''ஜோதிர் விதாபரண'' த்தில வராஹமிஹிரரை ''நவரத்தினங்களில்'' ஒருவராகக் குறிப்பிட்டிருக்கிறுர். காளிதாஸர் தாம் இந்த நூலைக் கலியுகாதி 3068 வது வருஷததில் எழுதியதாக

'' வாஷே ஸிநதுாரா தர்ஸனுபபரா குணேர்
யதே கலான ஸமஸ்ரீ,தே மாஸே மாதவ
ஸஞநிதேத்ர விஹிதோ கிரந்த கிரியோபக்ரமா. ''

என்று குறிப்பிட்டிருக்கிறுர் கலி கி மு 3102-ல் ஆரம்பித்ததால், காளிதாஸரும், வராஹமிஹிராரும் கி மு. 34-ல வசித்ததாக இதனுல் ஏற்படும், ஆகையால ஆரிய பட்டா இதற்கும் முன்பு இருந்தார என்று ஏற்படும். மேலும் வராஹா

மிஹிராசசாரியார் தமமுடைய ''பிருஹத ஸம்ஹிதையில்'' ''ஆஸ்லே ஷாாததா தக்ஷிணம் உத்தரம் அயனமரவேர் தனிஷ்டாத்யான நூனம கதாசிதாவிந யேஞேக்தம பூர்வசாஸ்திரேஷு'' என்று ''வேதாஙக ஜோதிஷத்தில கூறியதையே திருமபக கூறுகிறுா மேலும தமது ''பிருஹத ஜாதககதில்'' ''யவனா'' களைப்பறறியும் 'யவனுசசாரியாரை'' பற்றியும் குறிபபிட்டு அவர்கள கொளகை தமககு சரியாகப்படவில்லை என்று குமப லசணப பலனகளை பறறி கூறுமபோது சொலலுகிறுர் ''யவனாகள'' எனபது கிரேககாகள எனறும் ''யவனுச்-சாரியார்'' எனபவா கிரேககாகளுககு ஆசாரயராக இருந்து ஜோதிஷம சொலலிக கொடுத்தவா என்றும கூறுகிறுாகள். இவறருெலலாா இநத தேசத்து ஜோதிடமும வானை சாஸ்தி-ரமும் கிரேக்கர்கள இநதியாவுக்கு வருவதறகு பல ஆயிரம ஆணடுகள முனபே ஏறபட்டன எனபதும் விளங்கும் மேலும ஜோதிஷத்தின் வோ போன்ற பாாசர மஹரிஷி எழுதிய ''பராஸர ஹோரா சாஸ்திரம'' எனபது ''பாரதம'' எழுதிய வியாஸரின் தநதையான பராசரரால் எழுதபபட்டது. இன்றும ஜோதிடாகளுககு இனறியமையாதது. இது ''பாரதத்திலும'' தொன்மையானது ஸத்யாச்சாரியார் எழுதிய ''துருவநாடி'' ''பஞ்ச சித்தாந்தம'' இவைகளும் இதே காலத்தில் எழுதப்படடவை இவைகளை வராஹமிஹிரா முதலியோர் மேற்கோள காட்டியுள்ளனர். இவைகள் எலலாம நமமிடமிருந்தே கிரேக்கர்கள ஜோதிஷ வான சாஸ்திரஙகளைக் கற்றுச சென்றனர் என்பதற்கு சான்றுகள்.



பூக்கவி கண்ட காப்பியம்

— ஸ்ரீ T G. அனந்த சுப்ரமணியம் —

(காபேயன்)

அயோத்யா காண்டம்

★ ★ ★

(முன்தொடர்)

ராமன் லக்ஷ்மணனைப் பார்த்துக் கூறுகிறார்

"अग्रतो गच्छ सौमित्रे सीता त्वामनुगच्छतु ।
पृष्ठतोऽनुगमिष्यामि सीतां त्वां चानुपालयन् ॥"

லக்ஷ்மணா! நீ முன் செல், உன் பின் ஸீதை வரட்டும், அதற்குப் பின் உங்கள் இருவரையும் பின் தொடர்ந்து நான் வருகிறேன் என்று இவ்விதம் புறப்பட்டு பரத்வாஜாச்ரமத்தை அடைந்தார்கள்.

சுமந்திரன் விடை பெற்றுச் செல்லும் பொழுது கூறுகிறான். ''நான் ராமனை விட்டுப் பிரிந்து அயோத்திக்குச் சென்றால் அப்பொழுது மக்கள் என்னைவிட கைகேயி மேலானவள் என்று'' கூறுவர் என்பதை கம்பர் அழகாகக் கூறுகிறார்

'' அங்கி மேல் வேள்வி செய்து, அரிதில் பெற்ற, நின்
சிங்க ஏறு, அகன்றது என்று உணர்த்தச் செல்கேனோ?
எங்கள் கோமகற்கு இனி என்னில, கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலும் ஆல். ''

அரசன் பால ஹோமாக்னியில் உண்டான சிங்கம் போன்ற நடையுடைய ராமன் உனைவிட்டு நீங்கி விட்டான் என்று தெரிவிக்கச் செல்வேனோ? அப்படிச் சொல்ல நேர்ந்தால் எங்கள் அரசனுக்கு என்னைக் காட்டிலும் கேகயன் மகளே மேன்மையானவள் என்று. (அதாவது ராமனைப் பிரிந்த செய்தியை எவ்விதம் ''தசரதனிடம் சொல்லுவேன்'' என்று வருத்தமடைகிறான்.)

மேலும் சுமந்திரரிடம் ராமன் சுமந்திரரைக் கொண்டே செய்யச் சொன்ன வார்த்தையை கம்பர் வசிஷ்டரிடம் சொல்லிச் செய்வதாகக் கூறுகிறார் நிற்க, சுமந்திரரிடம் ராமன்

ஒருவன தான சமாசாரம சொலலியனுபபியதாக வாலமீகி கூறு கிறுர் கமபரோ வெனில் சீதையும செய்தி சொனனதாகக கூறுகிறுர்

" அனனவள கூறுவாள, அரசாக்கு அததையர்க்கு
எனனுடைய வணககம முன இயம்பு யான் உடைய
பொன் நிறப பூவையும கிளியும போறறுக என்று
உனனும என தங்கையர்ககு உணர்ததுவாய் என்முள். "

சீதை சுமநதிரரைப பார்த்து என் அரசருக்கும், மாமியருக்கும் என வணககத்தை முன்னே தெரிவித்து, என்னை நினைத்துக் கொண்டிருககும் தங்கை மார்களிடம் (ஊர்மிளா, மாண்டவீ, ச்ருதகீர்தி) பொன் நிறம் வாய்ந்த பூவையும், கிளியையும பாதுகாககவும் சொல்லவும் என்று கூறினுள். ஸீதை, ராமன் சுமந்திரரைப் பார்த்துச் சமாசராம் சொலலி யனுப்பியதாக அத்யாத்ம ராமாயணத்திலும், துளசிதாஸரின மானஸ பீயூஷததிலும் காணப்படவிலலை

கமபர் மேலும் கூறுகிறுர். லக்ஷ்மணனைக குறித்து செயதி கேட்டல், ராமன் பரதனுககுப பட்டம கட்டும் படியும, அவனுககு நல்வார்த்தைகளைச் சொல்லியனுப்புவதையும், அதற்கு லக்ஷ்மணன எதிராகக கூறுவதையும்,

" மினனுடன பிறந்தவாள பரதவேநதாககு என
மன்னுடன் பிறந்திலேன மணகொண்டு ஆள்கின்ற
தன்னுடன் பிறநதிலேன தம்பி முன அலேன்
என்னுடன் பிறந்தயான வலியன என்றி ஆல். "

ஒளியோடு தோனறிய வாளையுடைய பரதனுகிய அரசனுக்கு நான் என் அரசனுகிய இராமனுடன் பிறக்கவில்லை; நிலத்தைப் பெற்று ஆட்சி புரிகின்ற தன்னுடனும் பிறக்க வில்லை; சத்ருக்னனுக்கு அண்ணனும் ஆகேன் ஆதலால என்னெடு பிறந்தயான் சுகமேயுள்ளேன் என்று சொல்லுக, என்று

கம்பர் ராமனின் நிலையைக் கணடு பொறுகக முடியாமல் லக்ஷ்மணன் கூறுவதாகக் கூறியுளளார் போலும்

இநத வார்ததையைக கேட்ட ராமன

"ஆரியன இளவலை நோககி ''ஐய' நீ
சீரிய அல்லன செபபல'' எனறு "

லக்ஷ்மணு! தீய சொறகளைச சொல்லாதே! எனறு கூறினன.
சுமநதிரர் வசிஷ்டரிடம சமாசாரம் சொல்லியபிறகு, தச ரதரிடம ராமனைப் பற்றிக் கூறியவுடன் தசரதன் உயிர் துறந்த தும, அதை அறிநது கோசலை வருந்துதலும். வசிஷ்டர் பரத னுககுத் தூது அனுப்புதலும் கூறப்படுகிறது. எல்லா ராமா யணததிலும் பொதுவான கருதது காணப்படுகிறது ஆனல் கமபா மாததிரம ஓா மாறறம் செயதுளளாா

அதாவது ராமன் காட்டிறகுப புறபபடட முதல நாள் இரவிலேயே மககளைத் திருப்பி அயோததிககு அனுப்புவறகாக தேர் உருளைகளை அயோத்தி நகரம குறிதது செல்வது போல் செய்யச சொனனுா சுமநதிரரிடம். அதேபோல் அவா செய்ய மககள காலையில் எழுந்து பாா்கக அசசுவடுகளைக் கணடு மக்க ளும் அயோத்திககுத் திரும்பிவிட்டாாகள. அதற்குப பிறகு கங்கைககரை வரையில சுமந்திரர் வநததாகவும, குஹனைச் சந்தித்த பிறகே சுமந்திரருக்கு விடைகொடுத்து அனுப்பியதாக வும் வால்மீகி கூறுகிருர்.

(தொடரும)

கவனிக்கவும்

மணியார்டா கூபனில (Money Orders) சநதாத தொகை அனுபபுமபோது, சநதா நெமபரைக குறிதது அனுபபவும சநதாதாரர்கள் தங்களுடைய நெமபரை தேவஸதான மாத வெளியீடு உறையில் (Cover) கவனிக்கவும

சந்தாதாரர்களுக்கு ஓர் விண்ணப்பம்

—※※O※※—

ஸப்தகிரி மாத இதழ் சந்தாதாரர்களின் சந்தா காலம் 30-4-72 அன்று முடிவடைகிறது. முன் இருந்த சந்தா தொகைப்படி 0-75 மீதி உள்ளது. பிப்ரவரியிலிருந்து சந்தா தொகை அதிகமானதால் மீதி தொகை ரூ 4-25 (1-2-72 இருந்து 31-12-72 இந்த ஆண்டு வரை) அனுப்பவும். ஆகையால் சந்தாதாரர்கள் இந்த விஷயத்தைக் கவனித்துக் தங்களுடைய சந்தா தொகையை விரைவாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

T11, T17, T33, T54, T84, T89; T103, T106; T107, T108; T124; T125, T126; T128; T145, T157, T220, T222; T292; T293, T294, T355; T356, T358, T371, T418; T419, T421; T422, T582, T583, T586, T587, T594, T597; T598; T599, T850; T872, T899; T900; T907, T925

T1254, T1255, T1256, T1257, T1258, T1259, T1260; T1261; T1262, T1263, T1264, T1266, T1267, T1268, T1269, T1270; T1271, T1272; T1273, T1274; T1275, T1276; T1277; T1292, T1294, T1296, T1297, T1311; T1326; T1334; T1335; T1338, T1339.

மேற்குறித்த எண்கள் கொண்ட சந்தாதாரர்கள் 45 நாட்களுக்குள் சந்தாத் தொகையைச் செலுத்தாவிடில், அவர்களைச் சந்தாதாரர்களின் பட்டியிலிருந்து நீக்கி, அவர்களின் எண்களைப் புதிய சந்தாதாரர்களுக்குக் கொடுக்க நேரிடும்.

மாத இதழுக்குச் சம்பந்தப்பட்ட பணத்தை, மணியார்டர் மூலமாக, ''ஆசிரியர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி (A. P)'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

செக் மூலமாகவோ, அல்லது தவறுதலான முகவரிக்கோ அனுப்பும்படியான பணத்தைப் பற்றிய விபரங்களுக்கு இந்த அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்று அறிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்.

தைத்திரீய ஆரண்யகம்

तैत्तिरीयारण्यकम् ॥

(சூரிய நமஸ்காரம்)

—: வித்துவான ஸ்ரீ நடாதூா தேசிகாசசாாி —

★ ★ ★

(முனதொடா)

१६. कश्यपादुदिताः सूर्याः ।
पापान्निर्घ्नन्ति सर्वदा ।
रोदस्योरन्तर्देशेषु ।
तत्र न्यस्यन्ते वासवैः ।

கச்யபாத உதிதா: ஸூாயா:|
பாபான் நிாக்கனந்தி ஸாவதா|
ரோதஸ்யோ: அந்தர் தேசே ஷு|
தநர ந்யஸ்யந்தே வாஸவை: ||கசு||

கச்யபாத் — கச்யபனிடமிருந்து, உதிதா: — உடைான, ஸூர்யா: — சூரியர்கள், ரோதஸ்யோ: — பூலோகம், தேவலோகம் இவைகளுக்கு நடுவேயுள்ள, அநதர்தேசேஷு — நடுவிலுள்ள இடங்களில், பாபான் — பாபம செய்தவாகளை, ஸர்வதா — எப்பொழுதும், நிர்க்னந்தி — கொன்று விடுகிறாாகள் வாஸவை:— சூரியர்களாலேயே மறுபடியும் உயிர் பெறறு, அவர்கள், தத்ர— அநத நகரங்களிலேயே, ந்யஸ்யந்தே — தள்ளப்படுகிறார்கள்.

முதலில் பேசிய மஹரிஷி பின் வருமாறு விடை கூறினா. ''கசிபன் என்கிற எட்டாவது சூரியன் மஹா மேருமலையில வசிக்கிறார் என்பதை முனபே கூறியிருக்கிறோம. அவரிடமிருநது மேலும் பலா பிறநதனர். அவர்களுக்கும் சூரியர்கள் என்றே பெயர். அவர்கள் பாபிகளை, பூலோகததிற்கும் தேவலோகத்திற்கும் நடுவிலுள்ள இடங்களான நரகங்களில் தள்ளி பலவிதமாகத் துன்புறுத்திக் கொனறு விடுகினறனர். அந்த சூரியர்களே மறுபடியும் பாபிகளைப் பிழைககச் செயது அந்த நரகங்களில் மேன்மேலும் துன்பஙகளை அனுபவிக்கும்படி செய்கின்றனா.

१७. तेऽशरीरा. प्रपद्यते ।
यथाऽपुण्यस्य कर्मणः ।
आपाण्यपादकेशास: ।
तत्र तेऽयोनिजा जनाः ।।

தே அசரீராஃ பரபத்யநதே|
யதா அபுண்யஸ்ய கர்மணாஃ|
ஆபாணய பாத கேசாஸ:|
தத்ர தே அயோநிஜா ஜனாஃ ||கஎ||

தே — அந்த பாபிகள், அபுண்யஸ்ய — பாபமாகிய, கர்மணஃ — செயலுககு, யதா — ஏற்றபடி, அசரீராஃ — குறையுள்ள உடலைப் பெறறு, ப்ரபத்யந்தே — பிறவியைப் பெறுகினறனர். அபாணி — (சிலா) கைகள் இல்லாதவர்களாயும் அபாதகோசாஸஃ — காலகள் இல்லாதவர்களாகவும், தலையில் கேசம் இல்லாதவர்களாகவுமபிறந்து, தத்ர — அந்த நரகத்தில், தே ஜனாஃ— அந்த பாபிகளா, அயோனிஜாஃ — தாயின மூலமாகப் பிறக்காத புழு முதலியவைகளாகப் பிறக்கிறார்கள்

அந்தப பாபிகளா, அந்த நரகங்களில், தமது பாபச் செயல்களுககு ஏறறபடி, கை கால் கேசம் முதலிய உறுப்புகள் இல்லாத உடலைப் பெற்று துனபம அனுபவிக்கின்றனர். சில பாபிகளா தாயின கர்ப்பம் மூலம் பிறககாத புழு முதலிய பிறவிகளைப் பெறறு துன்பம் அடைகின்றனர்

१८ मृत्वा पुनर्मृत्युमापद्यन्ते ।
अद्यमाना स्वकर्मभिः ।
आशातिकाः कृमय इव ।
ततः पूयन्ते वासवैः ।।

ம்ருத்வா புனஃ மருத்யும் ஆபத்யநதே|
அத்யமானாஃ ஸ்வகர்மபி:|
ஆசாதிகாஃ க்ருமய இவ|
ததஃ பூயந்தே வாஸவைஃ ||கஅ||

ம்ருத்வா — அநத பாபிகள் ஒரு தரம் மரித்த பிறகு, புனஃ— மறுபடியும் பிறந்து, ஆசாதிகாஃ — நாமே தேடிக் கொல்லும், க்ருமய இவ — மூட்டைப் பூசசி முதலியவைகள் போல், ஸ்வகர்

மபி: — தமது பாபங்களாலேயே, அத்யமாநா: — உண்மைப்பட்டு (துன்பப்பட்டு) ம்ருத்யும் — மரணத்தை, ஆபத்யந்தே — அடைகிறார்கள். ததः — பிறகு, வாஸவை: — சூரியர்களாலேயே, பூயந்தே — பரிசுத்தி செய்யப்படுகிறார்கள்.

நரகங்களில விழுநத பாபிகள், ஒவ்வொரு க்ஷணத்திலும பிறப்பு, இறப்பு துன்பங்களை அனுபவிக்கிறார்கள். நமது கண்களில் படும் மூட்டைப் பூச்சி பேன் முதலியவைகளை நாமே கொன்று விடுகிறோம். அவவிதமே கசியபனின் தூதர்கள பாபிகளைத் தக்கவாறு துன்புறுத்துகின்றனா பல காலங்கள சென்ற பிறகு அந்தப பாபிகளை சூரியர்களே பரிசுததமாகச் செய்து விடுகிறார்கள்''.

பிராம்மண வாக்கியங்கள்

१९. अपैतं मृत्युं जयति । य एवं वेद ।
स खल्वेवविद् ब्राह्मणः ।
दीर्घश्रुत्तमो भवति ।
कश्यपस्यातिथिस्सिद्धगमनः सिद्धागमनः । तस्यैषा भवति ॥

அபைதம் ம்ருத்யும் ஜயதி| ய ஏவம் வேத|
ஸ கலவேவம்வித் ப்ராஹ்மண:|
தீர்க்கச்ருத் தமோ பவதி|
கச்யபஸ்யாதிதி: ஸித்தகமன: ஸித்தாகமன
தஸ்ஷா பவதி ||கசா||

பலசுருதி

ய: — எவன், ஏவம் — இவ்விதமாக, வேத — அறிவானோ, ஏதம் — இந்த, அபமிருத்யும் — பூச்சி முதலிய கீழ்த்தரப் பிறவியை, ஜயதி — கடந்து விடுகிறான். ஏவம் வித் — இவ்விதம் அறிந்த, ஸ கலு பிராம்மண: — அந்தப் பிராம்மணனே, தீர்க்கச்ச்ருததமோ பவதி — வெகு காலம் தேவர்கள் புகழும்படி பிரசித்தி பெறுகிறான். கச்யபஸ்ய — தேவலோகத்தில் கசியபனுக்கு, அதிதி: — விருந்தாளியாகவும், ஸிததகமன: — நினைத்தவுடன் கசியபனிடம் செல்லக கூடியவனாகவும், ஸித்தாகமன: — நினைத்தவுடனே இவ்வுலகத்திறகுத் திரும்பி வரக கூடியவனாகவும் ஆகிறான். தஸய ஏஷா பவதி — இச்செய்தியை பின்வரும் மந்திரம் விளககிக் காட்டுகின்றது.

மேலே கூறியபடி கசியபனின் மஹிமையை அறிநதவர்கள பாபகாரியங்களைச் செய்யமாட்டார்கள். ஆகவே பூச்சி புழு முதலிய பிறவிகளை எடுத்து அகால மரணங்களையும அடைய மாட்டார்கள். அத்தகைய ஒரு பிராம்மணன் இவ்வுலகில வாழும் பொழுதே அவனுடைய நற்குணஙகளை மற்ற தேவர்கள் மூலமாக அறிந்து கசியபன அவனை சந்தோஷமாகப் போற்று வாா. அவனை கசியபர் மேல உலகததிற்கு வரவழைத்து ஒரு விருந்தாளியைப் போல் உபசரிப்பார். அந்த பிராம்மணனுக் கும நினைத்த சமயத்தில் தேவலோகம செல்லவும், திரும்பி பூலோகத்திற்கு வரவும் சக்தி உணடாகும் ஆகவே யாவரும் கசியபனின் மஹிமைத தெரிநது கொணடால் அளவற்ற பயன் பெறலாம இதையே பின்வரும் ஒரு மந்திரம் விளக்கிக் காடடுகிறது.

२०. आयस्मिन् सप्त वासवाः ।
रोहन्ति पूर्व्या रुहः ।
ऋषिर्ह दीर्घश्रुत्तम. ।
इन्द्रस्य धर्मो अतिथिरिति ।।

ஆயஸ்மின் ஸப்த வாஸவாஃ|
ரோஹநதி பூர்வயா ருஹஃ|
ருஷிர்ஹ தீரகக ச்ருத்தமஃ|
இந்தரஸய கர்மோ அதிதிரிதி ||உ0||

யஸமின் — எந்த கசியபனிடத்தில், வாஸவாஃ — உலகத்தை வாழ வைப்பவர்களும, பூர்வ்யா ருஹஃ — முதலில் உண்டான வாகளுமான, ஸப்த — ஏழு சூரியர்கள, ஆரோஹந்தி — ஆசிர யித்து இருக்கின்றனரோ, இந்த்ரஸ்ய — அந்த சிறநதவரான கசியபனுக்கு, தீர்க்கச்ருத்தம்ஃ — தீர்க்கச் சுருத்தமர் என்று பெயா கொணட, ருஷிர் ஹ — ஒரு மஹாஷியானவர், கர்மஃ — மிகவும் ஜொலிக்கும், அதிதிஃ — விருந்தாளியாக, இதி — ஆனார் என்பது பிரசித்தம.

கசியபனிடமிருநதே ஆரோகன் முதலிய ஏழு சூரியர்கள் உணடானார்கள். அவர்களே உலகம் வாழ்வதற்காக முதலில் பிறநதவர்கள். அவர்கள கசியபனையே ஆசிரயித்து உள்ளனா.

அத்தகைய பெருமை வாய்ந்த கசியபனுக்கு, தீாகக சுருததமர் என்கிற ஒரு மஹரிஷி மிகுந்த காநதியுடன் ஜொலிககும் விருந தாளியாக ஆனூர். ஆகவே கசியபனை வழிபடுபவாகளுேம அவ விதமே கௌரவத்தைப பெறுவார்கள.

२१. कश्यपः पश्यको भवति ।
यत् सर्वं परिपश्यतीति सौक्ष्म्यात् ।।

பிராம்மண வாக்கியங்கள்

கச்யம்ஃ பச்யசோ பவதி,
யத் ஸர்வம பரிபசயதீதி ஸெளக்ஷம்யாத் ||உக||

யத — எந்த காரணததினுல, ஸெளக்ஷமயாத் — மிகவும நுட்பமாக, ஸாவம் — எலலா உலகங்களேயும, பரிபச்யதி — பாாககிருரோ, கசயபஃ — அதனுல் கசியபன, பசயகஃ — "பார்க்கிறவர்", என்ற பெயரைப் பெற்றவராக, பவதி — ஆகிருா.

மஹாமேருவில் வசிககும் கசியபன் என்கிற சூரியன், மிகவும நுட்பமான திவ்ய திருஷடியால் (ஞானககணணுல்) நடநதது, நடககின்றது, நடககப் போகினறது ஆகிய முக்காலததுச் செய்திகளேயும் அறிபவர். அதனுல் அவருக்குப் 'பச்யகர்" அதாவது "நுட்பமாகப் பாாப்பவா" எனற பெயரும் உண்டாயிற்று.

२२ अथाग्नेरष्टपुरुषस्य ।
तस्यैषा भवति ।।

அதாகனேஃ அஷ்டபுருஷஸ்ப|
தஸயைஷா பவதி ||உஉ||

அத — இனி, அஷடபுருஷஸ்ய — எட்டு விதமான உருவஙகளேக் கொணட, அக்னேஃ — அக்கினியின் மஹிமை கூறப்படுகிறது, தஸ்ய — அதை விளக்கும், ஏஷா — ஒரு மநதிரம, பவதி— மேலே கூறப்படுகினறது.

இதுவரையில் கசியபனின மஹிமை கூறப்படடது இனி சூரியனின் அம்சமான அக்கினியின மஹிமை கூறப்படுகிறது. அதை விளக்கும் மந்திரம் மேலே கூறப்படுகினறது.

२३. अग्ने नय सुपथा राये ।
विश्वानि देव वयुनानि विद्वान् ।
युयोध्यस्मज्जुहुराणमेनः ।
भूयिष्ठां ते नम उक्तिं विधेमेति ।।

அக்னே நய ஸுபதா ராயே|
விச்வானி தேவ வயுனானி விதுவான|
யுயோத்யஸ்மஜ் ஜுஹுராணம ஏனஃ|
பூயிஷ்டாம தே நம உகதிம விதேமேதி ||உங||

அக்னே — அக்னிதேவரே! ராயே — செல்வம் பெறுவதற்காக, ஸுபதா — நல்ல வழியில, அஸ்மான் — எங்களை, நய — நடத்துவீராக தேவ — தேவரே! விச்வானி — எல்லாவித, வயுனானி — வழிகளையும, வித்வான — அறிந்தவர் ஜுஹுராணம் — துனபுறுத்துகின்ற, ஏனஃ — பாபத்தை, அஸ்மத் — எங்களிடமிருந்து, யுயோதி — பிரித்து அகற்றும். தே — உமக்கு, பூயிஷ்டாம — கணக்கற்ற, நம உக்திம் — வணக்கங்களை, விதமே — செய்கிறோம்.

ஓ! அககினி தேவரே! எஙகளை நல்ல வழியில் தூண்டி அதன் மூலமாக வாழ்வதற்குச் செல்வம் பெறும்படி செய்ய வேணடும். இது சம்பந்தமாக உங்களுக்கு எல்லா விதமான மார்க்கங்களும தெரியும். எனது நற்செயல்களைத் தடங்கல் செய்யும பாபங்களை விலக்கி அருளவேண்டும். உங்களை மனம் மொழி மெய் ஆகிய மூன்று காரணங்களாலும் பன்முறை நாங்கள் வணங்குகிறோம. எங்களது வேணடுகோளை நிறைவேற்றுவீராக

எட்டாவது அனுவாகம் முற்றிற்று.



தர்ம மூர்த்திகள் இரண்டு

ஸ்ரீ ஏ. ஆர ஸ்ரீனிவாஸ சாமா.

★ ★ ★

ஸ்ரீமந ராமாயணம் தொடட இடமெல்லாம் தர்மம், சத்தியம, நேர்மை, ஒழுககம, நீதி, நெகிழ்ச்சி, பாசம், பக்தி, அன்பு, அருள் - இவை பீறிட்டும் புறபபடுவனப பாாக- கின்ருேம். அதனுல்தான அநதப புரைகானக்கு அளவிறநத தனிச் சிறப்பு ஏற்பட்டிருககின்றது. மூலேக்கு மூலே ராமாயண கதாப்பிரசங்கங்கள் ஏராளமாய நடநது வருவதறகுக் காரணமே, மேலே குறிபபிட்ட காரணஙகளே தான.

ராமன் மட்டுமா தாமத்திலும், சத்தியததிலும, ஒழுக கத்திலும் எடுததுக் காட்டாக, விளங்குகிருர்? அவருடன இணைந்த சகோதரர் - தாய்மார்கள் எலலோருமே அவா வழியே கைக்கொணட அதிசயத்தைக் காணகின்ருேம

தன் தாய் பெருமபாடுபட்டு தனக்கு ராஜ்யத்தைத் தேடி வைக்க, பரதன் என்ன செய்தான? ''அம்மா! எனமேல் உனக்கு எத்தனே அன்பு? அணணனுககு உரிய ராஜயத்தை உனது சாமர்த்தியத்திஞல எனது ஆககிஞயே! உனக்கு நான் என்ன கைமமாறு செய்வேன்?'' என்று தாயைப் போறறிப் பாராட்டிஞு? ஆடிப்பாடி அகமகிழ்ந்தாஞு?

இக்காலத்து பிள்ளேயாக இருந்தால், அப்படித்தான் இருந் திருப்பான் பரதன்! ஆனுல் அவன் யார்? கருணுகாகுத்தனின் உடன் பிறந்தவன் சத்தியமே ஓர் உருவாய் தோன்றிய சீலனின் சகோதரன். தாயின் மூலம் இச்சேதியறியநத பரதன் நிலே என்ன?

', மூன்றுலகினுக் கொடு முதலவஞய் முதல
தோன்றினவனிருக்க யான் மகுடஞ்சூடல
சான்றவா உரை செயத தருமமாயதே
ானறவன செயகையின இழுக்கு உணடாகுமோ? '' —(கமபா)

''அப்பா! பரதா! உன தாய அரும்பாடுபடடு உனக்கு இந்த பெரும் ராஜ்யத்தை வாஙகி வைத்திருககிருள். ஏற்றுச கொணடு ராஜ்யபபாரம செயவாய.'' எனறு கூறிய குல குரு வசிஷ்டப் பெருமானுக்கு பரதன கூறியப பதில இதோ மேலே காணபது.

"சுவாமி! மூன்று லோகங்களுக்கும் முதலவனான ஸ்ரீமந் நாராயணனே இங்கு ராமன் என்ற பெயருடன் எனக்கு மூதத வனாயப் பிறநதிருககையில், அவனுககுத் தம்பியான நான் முடி சூடுதல் எனபது எந்த நியாயத்திலே சேர்ந்தது? இதறகு ஏதா வது தஙகளால் ஆதாரம காட்ட முடியுமா குருதேவா! என்னைப் பெறறெடுத்தாளே கைகேயி! அவளுடைய செயலின் கொடு மையையும் கேட்டையும் அளவிட முடியுமா?" என்றும் பாதாழ் வாரை நாம் எப்படிப் போற்றுவது! ராமனுக்கு உடன் பிறநதவன் வேறு எப்படி இருகக முடியும?

சரி! இனி, பரதன தாய கோசலையின் முன்பு சபதம் செய் கிருளே! ஆகா! எப்படிபபட்ட கடுஞ் சபதம்! நினைத்தால நெஞ்சைப் பிழிந்தெடுக்கின்றது அதைச் கேட்ட கோசலை அன்னையின் உள்ளம் எப்படி நெகிழ்கிறது பாருங்கள்!

" தூயவாசகம் சொனன தோனறலைத்
தீய கானகம் திருவின் நீங்கிமுன
போயினுன் வரககண்ட பொம்மலான்
ஆய அன்பினுல அமுது புலலினுன "
—(கம்பர்)

இப்படி அருமையான சபதம் செய்த தன் குழநதை கண் மணி பரதனை கோசலை, கானகம் சென்று விட்ட தன் அருமை மைநதன் நீலமேகக் கண்ணன ரகுவீரன் திரும்பி வந்துவிட்ட தாகவே எண்ணியவளை, அவனை அப்படியே கட்டித் தழுவி முத்தமிடுகின்ருள். ராமன் காட்டுக்குச சென்றதால் ஏற்பட்ட துயாம கூடச் சமனமாகி விட்டதாம் அவளுக்கு.

இப்படி பரதனைக் கொண்டாடியவள் அன்னை கோசலை மட்டுநதானு?

" தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினையென்ன நீததுச் சிந்தனை முகத்தில தேககிப்
போயினை என்ற போழ்து புகழினேய் தன்மை கண்டால
ஆயிரம இராமர் நின்கேழ் ஆவரோ தெரியிலம்மா "
— (கம்பர்)

என்று வேடராஜன் குகன் கூட அல்லவா விழுந்து போறறினுன!

அணணு நடுதர்ம சொருபம், தமபி மறறெருரு தர்ம சொரு பம்! இரு தர்ம சொருபங்களையும் தராசின் இரு தட்டுகளில் ஏற்றினுல் எது தாழும்? தீர்ப்பு கூறுவது கடினமே!



“ இராமாவதாரம் ”

— முருகனடி சேலம். S. ஜெயராமன். :—

★ ★ ★

(முன்தொடர்)

அருள்பெற்ற அடியார்கள் :

இராமனிடத்திலே பக்தி செய்து அருள் பெற்ற அடியார்களில் முதன்மையானவர்களெனக் கருதப்படுவர்கள்.

a) ஆஞ்சநேயர், b) பக்த தியாகராஜர், c) வேடர் குலத் தலைவன் குஹன் முதலானோர் சிறப்பித்துக் கூறப்படுகிறார்கள்

a) அனுமத்ப்ரபாவம் :

வாயுதேவனது அருளால் அஞ்சனை வயிற்றில் பிறந்து, இந்திரனால் அருளிச் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணத்தை ஆறு நாட்கள் ஓதியுணர்ந்து இராவண யுத்தத்தில் இராமருக்குப் பற்பல உதவிகள் புரிந்த பெருவலிமையுடையவர் அநுமார். இராமநாமஞ் சொல்வதிலே பெருபக்தி கொண்டவர் உள்ளக் கோயில் காட்டியவர். குழந்தைப் பருவத்தே சூரியனைக் கனியெனப்பறிக்கச் சென்றவர் பகைவர்பால் தூது செல்ல அனுமனைப் போன்ற ஆற்றல் படைத்தவர் வேறு ஒருவருமில்லை என அனுமத் ப்ரபாவம் இராமபிரானால் அங்கதன் தூதுப் படலத்தில் பேசப்படுகிறது

படைப்பில் குரங்கானாலும், அநுமானைப் போன்ற புத்தி சாலிக் குரங்கைக் காண்பதரிது. அவன் வானர அரசனான சுக்ரீவனுக்குச் சேனாதிபதியாக இருந்தான். இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போனபோது அசசீதையைத் தேடிக் கண்டு பிடிப்பதிலே ராமருக்குப் பேருதவியாய் இருந்தவன் இவ்வனுமனேயாகும். அவனுக்குப் பல யுக்திகள் உண்டு. மலை போலவும், கைவிரல் போலவும் ஆகக்கூடிய சக்தி அவனுக்கிருந்தது. அவனது வால் மிகவும் நீளமானது அநுமான் தோற்றத்திலே அவலக்ஷணமாக இருந்தாலும அவனது இருதயம்பரிசுத்தமானது அழகிய இலங்கா நகரை அக்கினிக்கே இரையாக்கிவிட்டவன் இவ்வனுமான்தான். இறைவனுடைய நாமத்தை ஓதவும் பாடவுமே அனுமான் அவதரித்தான் எனலாம் அவ்வளவு ஞானமும் பக்தியும் அவனுக்கு ராமனிடத்திலே ராமபக்த அனுமனிடத்திலே பக்தி வைப்பவர்கள் வைராக்கிய ஞானத்தோடு கூடி சங்கீத ஞானமுமடையப் பெறுவர் என்பதாகக் கற்றறிந்தோர் கூறும் கருத்து

b) பகந தியாகராஜா

"இன்னிசை மூமமணிகள்" என்று போற்றபபடும் மூவருள் முதல்வா தியாராஜர். திருவாரூரப் பெருமான் பெயரே இவர் பெயராக அமைநதது, திருவாரூரில பிறந்த இவ்விசை ஞானச் செலவருக்கு நூற்றைமபது ஆணடுகளுக்கு முன்னே தோன்றியவா.

இவர் தெலுங்குப பாடல்களாகிய கீரத்தனஙகள பல இயற்றியவர். பகதித் தேன் சொட்டும பாடல்கள் அவை என்று பணணின் திறம அறிநதோா கூறுவா. ஸ்ரீ ராமனருள் பெற்று. கீாததனம உருகிப் பாடி, ராமானநதம் அநுபவித்த நிலையை, பல இடங்களில் சொலகிறுர்

இராவண பராகரமும, சமஹாரமும்:

இராவணன செலவப் பெருமையும், கொடுமை மிகுதியும், வீர மேம்பாடும் நிரமபிய இலங்கையில் அரசாடசி செயது தனனிகரில்லா இலஙகேச்வரனுகத் திகழ்ந்தான். இராவணன தவத்திஞல் மிகுந்த வலிமை பெற்றுத் திககு விஜயம் செயது யாவரையும் தன்னடிப படுததித் தன்னிகரில்லா ஆடசி செய்து வநததாக வரலாறு.

இராவணனது ஆற்றலை ராம தூதனுகிய அஙகதனே வியந்து தன்னுள கூறிக் கொண்டாலும் என்னே! அவனது பெருமை இராவணன தோற்றததிலே கடுங்கனல் விடமும் கூற்றும் கலநது விடுஞ்சுடர் மகுடம மின்னச் காட்சியளித்தானென இராவணத் தனமை கூறப்படுகிறது.

இராவணன் திககு விசயம் புரிந்த காலத்தில் பூலோக, வருண, அக்கினி, தேவலோகப் பொருள்கள் யாவற்றையும அழித்துப பெருவீரனுக விளங்கினுன் என்பதாம் இத்தகைய பேராற்றலைக் கண்டு அங்கதனே யமனுல் கூட இவனை வெல்ல முடியாது என்று கருதிஞன். இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற செயலால தன் குல முழுவதும் கொல்லும பாவியானுன். இராமன அதனுல் பல துன்பங்களையடைந்து, சீதையை மீட்டற காக இராவணனை அம்பெய்து வதைத்து, சீதையை மீட்டு, அயோத்தி சென்று, சிமமாசனத்தில் அமர்ந்தார் இதனுல் மீளவும் அயோத்தியாவாசிகள மகிழ்ச்சி பெற்றுர்கள்

இராமாயணம நூல பெருமையும - பிரிவும்:

கீாத்தி வாயநத, கமபன் கண்ட திருவவதாரமான. ராமாவதாரத்தின மகத்துவத்தை அறிவிககும் நூல் ராமாயணம்

உலகிலேயே உயர்ந்த ஆதிகாவியம் எனச் சிறப்பித்துக் கூறப்படுவது. இதைவிட பக்தி இலக்கியச்சுவை நிறைந்த காவியமில்லை வேதம் கூறுகிற தாமத்தைக் கடைப்பிடித்துக் காட்ட, மஹாவிஷ்ணுவே, மனிதனுக அவதரித்து, மனித குலத்துக்கு பெரிய உபகாரத்தைச் செய்த கதை அது

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பெரிய பெரிய மகான்களுக்கெல்லாம் ஒளி காட்டிய காவியமாக இவ்விராமாயணம் விளங்குகிறது. கேட்கக் கேட்க இனிக்கின்ற தெள்ளமுதம, ஆதமலாபத்தையும் மனச் சாந்தியையும் கொடுக்கவல்லது

மனித ஜென்மம் எடுத்தது இவ்விராமாயணத்தைக் கேட்பதற்காகவே என்று நம் முன்னோர்கள் இதில் பெருங்கீர்த்தி கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட சிறந்த புண்ய காவியத்தை சிரவணஞ் செய்தால் நல்லது எல்லாவற்றிற்கும் பக்திதான முக்கியம் அப்பொழுதுதான சித்திக்கும்.

புராணங்களில் முதலிடம பெற்றுள்ள ஸ்ரீ ராமாயணம் ஹிந்து தர்ம சாஸ்திரத்தை விளக்கிக் காட்டும நூல் ராமசந்திரனுடைய சரித்திரத்தைச் சொல்லும் இதிகாசம இஃது அறம், பொருள், இன்பம, வீடு, என்னும் நான்கினையும் கூறும் ஒரு தரும நூல்

நூலின் பெருமை

இந்நூல், பாலகாண்டம், அயோத்தியா காண்டம, ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம், உத்தரகாண்டம என்னும் ஏழு பெரும் பிரிவுகளையும், படலம் என்னும பல சிறு பிரிவுகளையும் உடையது.

இராமாயண போதனை :

பெண்களாலே துன்பம பெரிதும் வருமெனபது துணிவு. தசரதன பெண்ணின் சொல்லால் இறந்தான். இராமனே பெண் பிரிவால் வருந்தி நின்றுன இராவணன சீதையைக் கவர்ந்து சென்ற செயலால் தன் குலம் முழுதும் கொல்லும பாவியானுன். இதனுல் பெண்ணுசையின் தீமையைக் காட்டுவது ராமாயணம் என்று தெளியலாம்

சீதா பிராட்டியார தன மாட்டுப் பெருங்குற்றத்தை இழைத்த இராவணனைக் குறித்து, நீ நலமுடன் வாழ விரும்பினுயாகில் ஸ்ரீ இராகவப்பெருமானைச் சரணம் அடைவாயாக, இராகவப பெருமான் சரணமடைந்தவரிடம அளப்பரிய அன்

புடையவா என்றெல்லாம் உபதேசித்தருளியுள்ளது இங்கு நோக்கறபாலது.

குணகிருததாஸயம மிகவும சிறநதது. இதைத்தான ஸ்ரீமத் ராமாயணத்தில இளைய பெருமாள அநுஷ்டித்து அனைவர்க்கும் எடுத்துக காட்டுகிறா.

'அறத்தைத தீவினை வெல்லாது' எனபதறகு எடுத்துக்காட்டாக, கற்புத்தவறாது இலஙகாபுரியிலே சீதை இருநதனள். இதை ராமாயணம் தெரிவிககிறது மறறவர்களுக்கு வழிகாட்டுமாப் போல சீதை இருநதனள எனபதாம இராமாயணத்தை முதலில் வாலமீகி முனிவா வடமொழியில இயற்றினா. அதனைத் தழுவி தமிழ மொழியில் இயற்றியவா கமபர்.

ஆசிரியா வரலாறு :

இராமனது வரலாறறைக கூறும் கம்பராமாயணம் கம்பநாடடாழ்வாரால இயற்றப்பட்டப்பட்டது இவர் சோழநாட்டுத் திருவழுநதூரிலே உவச்சா குலத்திலே ஆதிததன் என்பாாககு மகனாகப் பிறந்தார். இவர் காலம கி. பி. 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதி எனறும், சமயம வைணவம் என்றும் கூறுவர்.

''கல்வியில் பெரியவா கம்பா''
''கவிச் சக்ரவாததி கம்பா''
''கற்பனைக்குக் கமபன்''
''விருத்தமென்னும ஒண்பாவில் உயா கம்பன்''
''கம்ப நாடன் கவிதையிறபோல
கற்றோர்க்கு இதயங்களியாதே''

''புகழ்க் கம்பன் பிறநத தமிழ்நாடு'' என்று அறிஞர் பெருமக்கள் இவா பெருமையைக கூறிப பாராட்டுவர்.

சடையபப வள்ளலால் ஆதரிக்கப்பட்டு, ஒட்டக் கூத்தா, ஔவையார், புகழேந்தி முதலான சம காலப் புலவர்களோடு வாழ்நதவர் கம்பா.

முடிவுரை :

பற்றறறவன் இறைவன அவனது அவதாரமான ராமாவதாரத தததுவத்தைக கூறும் நூல் இராமாயணம். புனிதமான இந்நூல் பூஜிக்கதக்கதாம இப்புணணிய நூலைப் பாராயணஞ் செய்வோர்ககுப் பரமனருள் கிட்டும். அதனால் சகல சௌபாக்கியங்களையும், சமபத்துககளையும, ஸ்ரீராமரின பரிபூாண கடாக்ஷததையும பெறலாம்

பற்றற்ற மனம = பக்தி முதிர்ந்த மனம். அதுவே இறைவன தனககு இருப்பிடமாகும் ஆதலால அவனைப் பற்றினுல் அவன் நம்மை அருளில் ஒன்று படுத்துவான. இதுவே உலக உண்மையாகும்.

ஸ்ரீமத் ராமாயணத்திலே வாலமீகி மறைந்து கிடக்ககூடியவற்றையெலலாம தான அறிவதோடு மட்டுமல்லாது பிறருககும் உணர்த்துபவா ராமன என்று பேசுகிருர். தேஹகாந்தியினுல் புற இருளைப் போக்கக கூடியவன. வாது செய்து மயங்கும் மனத்தராய் இல்லாமல் எமபெருமான் ஸ்ரீ நாராயணன் ராமசந்திரனேயனறி மறறிலலை எனறிருகக வேணடும்.

தன் எதிரியை ஸ்ரீராமன் இன்று போய் நாளை வா என்று சொலலி, பிறகுதான் ராவணஜயம நடத்திஞர். என்னே! ஸ்ரீராமனின் கருணை, ஆம் ராம நாமத்தை ஏத்திப் பாருஙகள் பிறகு தெரியும் அவனைப்போல அடியாரைக காக்கும் தெய்வம் தெயவம இல்லவே இல்லையெனறும ராமபகத அனுமானும், பக்த தியாகராஜரும் இதற்கு சாட்க்ஷி.

அயோதயா காண்டத்தில் ஸ்ரீ ராகவனும — உலகத்தில தர்மமே சிறந்தது. அதில் சத்யம நிலைபெற்றிருக்கிறது. நம்முடைய தகப்பன வாாத்தை தர்மத்தைப் பற்றியது. ஆகையால் அவவுத்தமமான தர்மத்தைச் செய்யவேணும என்று லக்ஷமணனுககு உபதேசிக்கிருர். அவ்வுபதேசத்தை ஒரு சிறு அம்சமாவது நாமும் ஏற்று அதன்படி நடக்க முயல்வோமாக. முயற்சி திருவினையாககும. அதற்கு அவவிறைவனுடைய அருளையே பிரார்த்திப்போமாக என்று கூறி முடிக்கிறேன்.

எமபெருமான் திருவடிகளே சரணம்



ஓம

"சரணாகதி"

ஸ்ரீ ஸ்வாமி கோபாலானந்தகிரி, ரிஷிகேஷ்.

--**o**--

உலகததில் பிறநத எல்லோரும் ஏதாவது ஒரு காமம் செயயாமல் இருக்க முடியாது. ஏனென்ருல், பிரகிருதியில் உற்பத்தியான மூன்று குணங்களுக்கப்பால் ஒரு பிராணியும இருபபதுகூட துர்லபம் இதையே கீதையில்

न हि कश्चित् क्षणमपि जातु तिष्ठति अकर्मकृत् ।
कार्यते हि अवशः कर्म सर्वः प्रकृतिजैः गुणैः ।।

न हि देह भृता शक्यं त्यक्तुं कर्मणि अशेषतः ।
यस्तु कर्मफलत्यागी सः त्यागी इति अभिधीयेत ।।

அத - III - 5 ல் பார்க்கலாம. தேக சம்பந்தமான அபிமானமுள்ள வரைககும், மிகுதியிலலாமல் கர்மத்தை தியாகம் செயய முடியாது. ஆகையால், செய்யவேண்டிய கர்மத்தை சுயநலமில்லாமல் செயவதே மிகவும் சிரேஷ்டம். கீதையில்

அத - XVIII - 11 ல. காமபலனை தியாகம் செய்து நியுக்த காமத்தை யார் செய்கிருர்களோ, அவாகள் கர்மம் செய்தாலும செய்யாதவர்களே என கருதபபடுகிருர்கள்.

நியுகத காமம.- சுய நலமிலலாமல, தான் வேண்டுமென்று எணணுமல வர்ணு சாமபபடி நியமிக்கப்பட்ட கர்மம்.

இதை கொஞ்சம் நாம் விபரமாகத் தெரிந்து கொள்ள வேணடும். ஒரு மாணவன் பள்ளிக்கு போனுல் அங்கே படிக்கவும, பரீக்ஷையில் தேறவும் தான் நியுக்த கர்மம் ஆனுல் அஙகு சென்ற மாணவன் சரியாக படிக்காமல் ஆடுவதிலும பாடுவதிலும் அதிகமாக சிரத்தை எடுத்து கொண்டால், எல்லோரும் புகழததான் செய்வார்கள் ஆனுல் பரீக்ஷ சமயத்தில் சரியான விடை எழுதாவிட்டால், கட்டாயமாகவே பரீக்ஷயில் தவறி விடுவான அது போலவே உத்தியோகத்தி

லிருப்பவர்கூட, நியுக்தகாமதததை (Duty) செய்யாமல், தன் இஷ்டபபடி கை கூலிகள் வாங்கி கொணடிருந்தால், முடிவில் வேலையை விட்டு நீக்கப்படுவாாகள். மற்றும் பல கஷ்டஙகள அனுபவிக்க வேணடி வரும் அதனுல்தான் நியுகததகர்மததை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம செய்ய வேணடும. அப்படி செயவதால் அவனுக்கு ஒரு பாபமும் கிடையாது கர்ம பலத்தை ாஸவனுரக்கு அர்ப்பணம் செயது, ஈஸ்வரனின கட்டளையால்தான், இந்த வாணுசாமபடி நியுகததகாமததை செயகிறேன் எனற திடமான மனபான்மை இருநதால், அவனே சிரேஷ்டன, பகதன், முகதன்

இவ்விதமாக காமம் செயயுமபோது, மத்தியில் அசிரத்தை, சந்தேகம், விபரீத புத்தி முதலியன உறபத்தியாகும இதை போக்குவதற்கு, தன்னுடைய பிரயாஸையுடன் கூட ாஸவரரின் கிருபை அவசியம் வேண்டும். இதறகாகவே முதலில் காம பலத்தை ாஸவரனுககு அர்ப்பணம் செய்து விட்டால், ாஸ்வரனின கிருபையால நாம செய்யவேணடிய நியுக்த கர்மத்தில் தடையாக வருகிறதை எல்லாம சூரியன் முன்னுள்ள பனிபோல் மறைநது விடும்

தற்சமயம் உலகம் கெட்டுவிட்டது, தர்மம் நாசமாகி விட்டது. எனறெல்லோரும் சபதம போடுகிறார்கள். உலகமும் கெட்டு விடவில்லை. தாமமும நாசமாகவில்லை ஆனுல் நாம் எல்லோரும் வர்ணுசர்ம நியுக்த காமத்தை சரியானபடி செயய தவறி விட்டோம. இதையே ஒவ்வொரு மனிதனும், தானே தெரிந்து கொள்ள முடியும். உள்ளங்கை நெலலிக்கனிபோல் தெரிந்துமகூட ஏதோ ஒரு காரண வசமாய் நியுக்த கர்மத்தை சரியாளபடி செய்ய அசமர்த்தனுகவே இருக்கின்றான். இதை போக்குவதற்கே, ஈஸ்வரனின் கிருபை கட்டாயம் வண்டும்

तमेव शरणं गच्छ सर्व भावेन भरत ।
तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥

கீதை அத் - XVIII - 62 ஆகையால் ாஸவரனிடம் சரணமடைய வேணடும. அவனுடைய கிருபையால நிததியமான சாநதி கிடைக்கும் சாந்தியால் சகல சுகமும் கிடைக்கும.

ஆகையால நாம எல்லொரும் கலியுக கடவுளாகிய ஏழு மலைவாசனுகிய ஸ்ரீ வெஙகடேஸ்வரின பொற்கமல பாதங்களுககு சரணமடைய வேணடும.

ஸ்ரீமந கருபாஜலநிதே க்ருதஸாவ லோக
ஸாவஜ்ஞ சகத நதவதஸல ஸாவசேஷிந |
ஸவாமிந ஸுசீல ஸுலபாசரித பாரிஜாத
ஸ்ரீ வெஙகடேச சரணௌ சாணம் பரபதயே ||

இவ்விதமாக சரணமடைநது வருஞசர்ம தர்மப்படி நியுக்த கர்மத்தை செய்து வந்தால் ஒரு விதமான பாபமும் சேராது. சாநதமாகவும, சுகமாகவும், சநதோஷமாகவும ஜீவிதது வாழலாம




விண்ணப்பம்

தததுவ நூல, மத சமபநதமான புத்தகங்கள், இலககியங்கள் முதலியனவறறை, யாத்திரீகர்கள இலவச மாகப் படிபபதறகுத திருமலையில அமைககப பட்டிருக்கும் திருமலை - திருபபதி தேவஸ்தான நூல நிலையததிறகு இலவசமாக அனுபபினுல மகிழ்சசியுடன வரவேறகிறோம.

Executive Officer, T. T Devasthanams, Tirupati.

EDITED AND PUBLISHED BY M. CHANDRAMOULI REDDY, EXECUTIVE OFFICER TIRUMALA-TIRUPATI DEVASTHANAMS AND PRINTED AT T T D. PRESS, TIRUPATI.



A view of the T. T. D. Information Centre Madras, illuminated on the eve of its 23 Anniversary.